தினமணி

# கண்டலேறுவில் திறக்கப்பட்ட தண்ணீரின் அளவு 1,000 கன அடியாக உயர்வு



ஆந்திர மாநிலத்தில் இருந்து தமிழகத்துக்கு வினாடிக்கு 500 கன அடியாக திறக்கப்பட்ட தண்ணீரின் அளவு வினாடிக்கு 1000 கன அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. சென்னைக் குடிநீரின் முக்கிய ஆதாரமாக விளங்கும் ஏரிகளில் ஒன்றாக இருப்பது பூண்டி ஏரி. 323.10 கோடி கன அடி கொள்ளளவு கொண்ட பூண்டி ஏரியில் சேமிக்கப்படும் தண்ணீர், இணைப்புக் கால்வாய் வழியாக செம்பரம்பாக்கம், புழல், சோழவரம் ஆகிய ஏரிகளுக்கும், பூண்டியில் அமைந்துள்ள சென்னை குடிநீரேற்று நிலையம் ஆகியவற்றுக்கும் அனுப்பப்பட்டு, அங்கிருந்து சென்னைக் குடிநீருக்கு அனுப்பப்படுகிறது. கடந்த ஆண்டு கோடைக்காலத்தில் பூண்டி ஏரி, வரலாறு காணாத அளவுக்கு வறண்டது. இதனால், பூண்டி ஏரியில் தற்போது வெறும் 7.90 கோடி கன அடி மட்டுமே நீர் இருப்பு உள்ளது. இந்நிலையில், ஆண்டுதோறும் ஆந்திர மாநிலம் கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர், இந்த ஆண்டில் ஏற்கெனவே இரண்டு

முறை திறக்கப்பட்டு பாதியிலேயே திடீரென நிறுத்தப்பட்டது. எனவே, சென்னைக் குடிநீரின் தேவையைக் கருத்தில்கொண்டு, தமிழக அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினர். இதையடுத்து, கடந்த 1-ஆம் தேதி, வினாடிக்கு 500 கன அடியாக கண்டலேறு அணையிலிருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது அந்த ஏரியின் அளவு, வினாடிக்கு 1000 கன அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. திறக்கப்பட்ட தண்ணீர், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை அல்லது மாலையில் தமிழக எல்லையான ஜீரோ பாயின்ட்டை வந்தடையும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பசுந்தீவன உற்பத்திக்கு மானியம்: விவசாயிகளுக்கு அழைப்பு**

பசுந்தீவன உற்பத்திக்கு மானியம் அறிவித்துள்ள நிலையில் பயிரிட விருப்பமுள்ள விவசாயிகள் கால்நடை உதவி மருத்துவரைத் தொடர்பு கொள்ளலாம் என்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் அறிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: பால் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான அளவு பசுந்தீவனம் வழங்குவது இன்றியமையாததாகும். கால்நடைகளுக்கான மொத்த உற்பத்தி செலவில் 70 சதவீதம், தீவனம், பசுந்தீவனம் உற்பத்திக்கு மட்டுமே செலவிடப்படுகிறது. பசுந்தீவனத்தின் தேவைக்கும், உற்பத்திக்கும் இடையே மிகப்பெரிய இடைவெளி உள்ளது. ஆகவே, தீவனப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையிலும், கால்நடை வளர்ப்போர் பசுந்தீவனத்தை உற்பத்தி செய்வதை ஊக்கப்படுத்தும் வகையிலும், தமிழக அரசு கடந்த 3 ஆண்டுகளாக மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் அரசு மானியத்துடன் கூடிய கால்நடை தீவனப் பயிர் சாகுபடி திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

சாகுபடி திட்டங்கள்: அதிக மகசூல் தரக் கூடிய கம்பு நேப்பியர் தீவனப்பயிர் இறவையில் கால் ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்ய ரூ. 2 ஆயிரம் மானியம் (100 சதவீதம் மானியம்). மானாவரியில் கால் ஏக்கர் பரப்பில் தீவனச் சோளம், தீவனத் தட்டைப்பயறு சாகுபடி செய்ய ரூ. 550 மானியம். தெளிப்பு நீர்ப் பாசன கருவிகள் நிறுவுவதற்கு விவசாயிகளுக்கு ரூ. 18,750 (75 சதவீதம்) மானியம். அகத்தி மர வகை தீவன பயிர் சாகுபடி செய்ய 100 சதவீத மானியத்துடன் அகத்தி விதைகள் விநியோகம். அசோலா திடல் அமைக்க ரூ. 1,600 மானியம் (100 சதவீத மானியம்). இந்தத் திட்டங்களில் பயன்பெற, கால்நடை வளர்ப்பில் ஈடுபட்ட விவசாயிகள் தங்கள் பகுதியைச் சார்ந்த கால்நடை உதவி மருத்துவரை நேரில் தொடர்பு

கொண்டு பயன்பெற விருப்பமுள்ள கிட்டங்களை குறிப்பிட்டு எழுத்து மூலமாக விண்ணப்பம் அளித்து பயன்பெறலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகள் சங்க நிர்வாகக்குழு கூட்டம்

கந்தர்வகோட்டையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றிய நிர்வாகக் குழுக் கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு விவசாய சங்க ஒன்றியத் தலைவர் கே. கலியபெருமாள் தலைமை வகித்தார். இதில் கந்தர்வகோட்டை பகுதியை வறட்சி பகுதியாக அறிவிக்க வேண்டும். கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனையில் போதுமான துப்புரவு பணியாளர்களை நியமிக்க வேண்டும். மேலும் திருச்சியில் நடைபெற உள்ள விவசாயிகள் மாநில மாநாட்டில் இப்பகுதி விவசாயிகள் பெருமளவில் கலந்துகொள்வது என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## கூத்தூரில் கடல்போலானது காவிரி தடுப்பணை

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் ஒன்றியம், கூத்தூர் அருகே காவிரியாற்றில் கட்டப்பட்ட தடுப்பணையில் தேங்கி வழியும் தண்ணீர் கடல்போல காட்சியளிக்கிறது. மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீரில் சுமார் 50% வீணாக கடலில் கலக்கிறது. இதைத் தவிர்க்க தமிழக முதல்வர் ஜெயலலிதா, காவிரியில் தடுப்பணைகள் கட்டப்படும் என அறிவித்தார். இதைத்தொடர்ந்து, பொதுப்பணித் துறையின் நீர்வள ஆதாரத் துறை சார்பில், தஞ்சாவூர் மாவட்டத்தில் காவிரி, வெண்ணாறு, குடமுருட்டி, பட்டுக்கோட்டை அருகே உள்ள நஸ்விணி ஆறு, வல்லம் வாரி போன்ற பகுதிகளில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் ரூ. 67.68 கோடியில் 11 தளமட்டச் சுவர்களும், 14 தடுப்பணைகளும் கட்டப்பட்டன. பூதலூர் ஒன்றியம், கூத்தூர் வாய்க்கால், பழைய மகாராஜபுரம் வாய்க்கால்களுக்கு நீர் வழங்க காவிரி ஆற்றில் தளமட்டச்சுவர் ரூ. 13.40 கோடியில் கட்டப்பட்டது. இந்த நிலையில், ஆடிப்பெருக்கையொட்டி, கல்லணை காவிரியில் 2300 கனஅடி நீர் திறக்கப்பட்டது. இது திருக்காட்டுப்பள்ளி அருகே கூத்தூரில் கட்டப்பட்ட தடுப்பணையில் தேங்கி, வழிந்தோடியது. இதனால் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதுகுறித்து விட்டலபுரத்தைச் சேர்ந்த விவசாயி கணேசமூர்த்தி கூறியது: பூதலூர் ஒன்றியத்தில் கூத்தூர், விட்டலபுரம், பவனமங்கலம், விஸ்ணம்பேட்டை, மகாராஜபுரம், வளப்பக்குடி, நடுப்படுகை போன்றவை ஆழ்குழாய் கிணறு மூலம் மூன்றுபோகம் விவசாயம் நடைபெறும் பகுதியாகும். மேலும், எள், உளுந்து, வாழை, வெற்றிலை, காய்கறிகள் என நன்கு

விளையும் பகுதி. சாதாரணமாக 100 அடி ஆழம் வரை ஆழ்குழாய் கிணறு அமைப்போம். கடந்த சில ஆண்டுகளாக நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால், விவசாயத்துக்கு தண்ணீர் பற்றாக்குறை இருந்தது. இந்த நிலையில், கூத்தூர் பிரிவு வாய்க்கால் அருகே முதல்வர் ஜெயலலிதா தடுப்பணை கட்ட உத்தரவிட்டார். தற்போது திறந்துவிடப்பட்டுள்ள தண்ணீரில் தடுப்பணை கடல்போல் காட்சியளிப்பதோடு நிரம்பி வழிகிறது. இதனால், இப்பகுதி நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து மண்வளம் அதிகரிக்கும். இதனால், விவசாயம் மேலும் செழிக்கும் என்றார்.

## வேளாண் உதவி அலுவலர்களுக்கு மடிக்கணினி

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள வேளாண் உதவி அலுவலர்களுக்கு ரூ. 3 லட்சத்திலான மடிக்கணினிகள் சனிக்கிழமை வழங்கப்பட்டன. மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகக் கூட்டரங்கில், வேளாண் துறை மூலம் உதவி வேளாண் அலுவலர்களுக்கு சிறு மடிக்கணினி வழங்கும் நிகழ்ச்சி சனிக்கிழமை நடைபெற்றது. இதில் பெரம்பலூர் தொகுதி மக்களவை உறுப்பினர் ஆர்.பி. மருதராஜா, எம்எல்ஏ இரா. தமிழ்ச்செல்வன் ஆகியோர் முன்னிலையில் மடிக்கணினிகளை வழங்கிய ஆட்சியர் தரேஸ் அஹமது பேசியது: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் பயிரிடும் பயிர்கள், அவர்களது விவசாய நிலங்களின் பரப்பளவு குறித்த விவரங்கள் வேளாண் துறை அலுவலர்களால் தொகுக்கப் பட்டுள்ளன. விவசாயிகளின் நிலத்தில் உள்ள சத்துக்களின் விவரங்கள், மண்ணிண் தன்மைக்கு ஏற்ப பருவ காலங்களில் பயிரிட வேண்டிய பயிர்கள், உர மேலாண்மை மற்றும் நீர் மேலாண்மை குறித்தும், விவசாயிகளுக்கு தெரிவிக்க பண்ணைப் பயிர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ், 20 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை அதிகரித்து, விவசாயிகளின் வருமானத்தை பெருக்கும் வகையில் வேளாண் துறை அலுவலர்கள் பணியாற்ற வேண்டும் என்றார் அவர். நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் அழகிரிசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு விதைநெல்

கோவை வேளாண் பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் சார்பில் திருத்துறைப்பூண்டி அருகே உள்ள வேப்பஞ்சேரி கிராமத்தில் சனிக்கிழமை விவசாயிகளுக்கு நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கி, விவசாயிகளுக்கு இலவசமாக விதை நெல் உள்ளிட்ட வேளாண் இடுபொருள்கள்

வழங்கப்பட்டது. கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் 1983-87ல் கல்லூரி படிப்பை முடித்து பல்வேறு இடங்களில் பணிபுரிந்து வரும் இந்த மாணவர்கள் கிராமங்களைத் தேர்ந்தெடுத்து நவீன வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்தும், புவி வெப்ப மயமாதலைத் தடுக்க மரங்களின் அவசியம் குறித்தும் வேப்பஞ்சேரி தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் விவசாயிகளுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சங்கத்தின் உறுப்பினரும், திருவாரூர் மாவட்ட கூட்டுறவு இணைப் பதிவாளருமான ரவிச்சந்திரன் தலைமை வகித்தார். டெல்டா மாவட்டத்தில் நெல் சாகுபடியுடன் மாற்றுப் பயிர்கள், பணப் பயிர்கள் சாகுபடி மேற்கொள்ள வேண்டுமென விவசாயிகளை மாணவர்கள் கேட்டுக்கொண்டனர். பின்னர் விவசாயிகளுக்கு விதை நெல் உள்ளிட்ட வேளாண் இடுபொருள்களை வழங்கினர். தொடர்ந்து, வேப்பஞ்சேரி தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் மரக்கன்றுகளை நட்டனர். நிகழ்ச்சியில் கூட்டுறவு வங்கித் தலைவர்கள் செல்வி அமுதன், அ. செந்தில்நாதன், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி உதவி கள மேலாளர் சிவசுப்பிரமணியன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**<u>விவசாயத்திற்கு மானியத்துடன் சோலார் பம்ப் செட் வினியோகம்</u>**

திண்டிவனம் : விவசாயிகள் சோலார் பம்ப் செட் அமைக்க அரசிடம் 80 சதவீதம் மானியம் பெறலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. திண்டிவனம் வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடி ஜெபக்குமார் வெளியிட்டுள்ள அறிக்கை:விழுப்புரம் மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் சூரிய ஒளி கிடைப்பதால், திண்டிவனம் பகுதியில் உள்ள விவசாயிகள் மின்சாரத்தை பயன்படுத்தாமல் சூரிய ஒளிசக்தியால் இயங்கும் சோலார் பம்ப் செட்டுகளை பயன்படுத்தி விவசாயம் செய்யலாம். திறந்தவெளி கிணற்றில் 5 ஹெச்பி திறன் கொண்ட சூரிய ஒளி சக்தியில் இயங்கும் மோட்டார்கள் அமைக்க 5 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. இதில் தமிழக அரசு 3 லட்சத்து 84 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்குகிறது.சூரிய ஒளி மூலம் இயங்கும் சோலார் பம்புகள் திறந்த வெளிகிணற்றில் 100 அடி ஆழம் வரையிலும் ஆழ் துளை கிணற்றில் 250 அடி ஆழம் வரையிலும் தண்ணீர்

இறைக்கும் திறன் உடையது. மேலும் நிழல் விழாத 200 சதுர மீட்டர் இடத்தில் சோலார் பேனல்கள் அமைத்திடவேண்டும். ஐந்து ஆண்டுகள் சோலார் நிறுவனம் பராமரிப்பு பணிகளை செய்யும்.இவ்வாறு உதவி இயக்குனர் கென்னடி ஜெபக்குமார் அறிக்கையில் கூறியுள்ளார்.

## இலவச ஆடுகள் வழங்கும் விழா

செஞ்சி : வல்லம் ஒன்றியம் பென்னகர் ஊராட்சியில் விலையில்லா ஆடுகள் வழங்கும் விழா நடந்தது. ஊராட்சி தலைவர் ராஜமுத்து அசோக்குமார் தலைமை தாங்கினார். செஞ்சி கூட்டுறவு வேளாண்மை உற்பத்தியாளர்கள் விற்பனை சங்க தலைவர் விநாயகமூர்த்தி முன்னிலை வகித்தார். இதில் டாக்டர் லட்சுமணன் எம்.பி., கலந்து கொண்டு, 41 பயனாளிகளுக்கு 5 லட்சத்து 10 ஆயிரத்து 450 ரூபாய் மதிப்புள்ள தலா நான்கு வெள்ளாடுகளையும், பென்னகர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் பயிர் கடன்களையும் வழங்கினார். மாவட்ட கவுன்சிலர் வெங்கடேசன், கடன் சங்க தலைவர் அசோக்குமார், மாணவரணி மாவட்ட செயலாளர் ராமசரவணன், மருத்துவ அணி மாவட்ட செயலாளர் டாக்டர் ராமச்சந்திரன், கூட்டுறவு விற்பனை சங்க துணை தலைவர் தேவராஜ், அ.தி.மு.க., நிர்வாகிகள் கிருஷ்ணன், ஆறுமுகம், ஊராட்சி துணை தலைவர் வசந்தகுமாரி, ஊராட்சி தலைவர்கள் பழனி, சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சூரிய ஒளிசக்தி மூலம் இயங்கும் சோலார் பம்ப் ஷெட் துவக்கம்

திண்டிவனம் : வண்டிப்பாளையத்தில் சூரிய ஒளிசக்தி மூலம் இயங்கும் சோலார் பம்ப் ஷெட்டினை வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் இயக்கிவைத்தார். திண்டிவனம் தாலுகாவில் முதல் முறையாக வண்டிப்பாளையத்தை சேர்ந்த முத்துக்கிருஷ்ணன் என்ற விவசாயின் நிலத்தில் மானிய முறையில் சூரிய ஒளிசக்தி மூலம் இயங்கும் சோலார் பம்ப் ஷெட் அமைக்கப்பட்டுள்ளது.இந்த பம்ப் ஷெட்டினை வேளாண்மை உதவி இயக்குநர் கென்னடி ஜெபக்குமார் இயக்கி வைத்தார். வட்டார தொழில் நுட்ப மேலாளர் செந்தில்குமார், உதவி வேளாண்மை அலுவலர்கள் விஜயலட்சுமி, சுரேஷ், யமுனா,

மஞ்சு மற்றும் தொழில்நுட்ப அலுவலர் வீராசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பவானிசாகர் அணையின்நீர்மட்டம் தொடர்ந்து உயர்வு

சத்தியமங்கலம்: பவானிசாகர் அணைக்கு தண்ணீர் வரத்து தொடர்ந்து, அதிகரித்து வருவதால், அணையின் நீர்மட்டம், 71 அடியை தொட்டது.தென்னிந்தியாவின் மிகப்பெரிய மண் அணை என்ற பெருமை கொண்டது பவானிசாகர் அணை. இந்த அணையின் மொத்த உயரம், 120 அடியாகும். இதில், சகதிகள், 15 அடி கழித்து, மொத்த நீர்மட்ட உயரம், 105 அடியாகும். மொத்த நீர் கொள்ளளவு, 32 டி.எம்.சி., ஆகும்.இந்த அணையில் இருந்து, கீழ்பவானி வாய்க்கால் மூலம் திறந்துவிடும் தண்ணீரால், ஈரோடு மாவட்டத்தை சேர்ந்த, 2.07 லட்சம் ஏக்கர், விவசாய நிலங்கள் பயன்பெறுகிறது. பவானி ஆற்றில் திறந்துவிடப்படும் தண்ணீரால் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காளிங்கராயன் பாசனப்பகுதியை சேர்ந்த 50 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறுகிறது.கடந்த சில மாதங்களாக, அணைக்கு வரும் தண்ணீர் அளவு குறைந்தது. இதனால், குடிநீர் பிரச்னை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டது.அணையின் நீர்மட்டம் குறைந்ததால், மீன் பிடிப்பு தொழில் மற்றும் நீர்மின் உற்பத்தி உள்ளிட்டவைகள் பாதிக்கப்பட்டது.இந்நிலையில், கடந்த மாதத்தின் இறுதியில், பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில், தென்மேற்கு பருவமழை துவங்கியதால், அணையின் நீர்வள ஆதாரமான பவானி ஆறு மற்றும் மோயாற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்தது. இதனால், அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து.நேற்று காலை, எட்டு மணியளவில், பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 71 அடியாக உயர்ந்தது. அணையில், 11.321 டி.எம்.சி., தண்ணீர் இருந்தது. அணையில் இருந்து, பவானி ஆற்றில் பாசனத்துக்காக, வினாடிக்கு, 1,500 கனஅடியும், கீழ்பவானி வாய்க்காலில் வினாடிக்கு, ஐந்து கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது.

## கூடுதல் பயிர் கடன் தேவை; விவசாயிகள் எதிர்பார்ப்பு

ஈரோடு: ஏற்கனவே பெற்ற கடனை கருத்தில் கொள்ளாமல், விவசாயிகளுக்கு கூடுதலாக பயிர் கடனை வழங்க வேண்டும், என்று, தமிழக விவசாயிகள் சங்கத்தினர் கேட்டு கொண்டுள்ளனர். தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட

அமைப்பு செயலாளர் லோகுசாமி, கலெக்டரிடம் வழங்கியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது: அனைத்து விவசாயிகளுக்கும், நிலுவையில் உள்ள கடனை கருத்தில் கொள்ளாமல் கூடுதலாக பயிர் கடன் வழங்க வேண்டும். காவிரி டெல்டா பாசன பகுதியில் வழங்குவது போல், மூன்று ஆண்டாக வறட்சி பாதித்த எல்.பி.பி., பகுதிக்கும் விதை நெல், உரம், சமுதாய நாற்றாங்கால், பண்ணை கருவிகளை பயன்பாட்டிற்கு வழங்க வேளாண் பொறியியல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். திருந்திய நெல் சாகுபடி முறைக்கு கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து அதனை எல்.பி.பி., பாசன பகுதியில் பரவலாக்க செய்ய வேண்டும். இயற்கை விவசாயிகளுக்கும் பயிர் கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கோமாரி நோய்க்கு முன் கூட்டியே தடுப்பூசி போட வேண்டும். தஞ்சை, நாகை, திருச்சி மாவட்டங்களில் வழங்கியது போல் மூலிகை மருந்துகளை அரசு முன் கூட்டியே இலவசமாக வழங்க வேண்டும். கூட்டுறவு ஒன்றியங்களில் விவசாயிகள், விவசாய பணிக்காக வாங்கும் பத்திர ஈட்டு கடன் ஏழு ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது, அரசின் கடன் தள்ளுபடி உத்தரவு அடிப்படையில் உடனடியாக தள்ளுபடி செய்ய வேண்டும். ஒரு சில இடங்களில் மட்டும் தள்ளுபடி செய்யாமல் உள்ளதை குறிப்பாக மொடக்குறிச்சி, நசியனூர், காஞ்சிகோவில், பெத்தாம்பாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## <u>ரப்பர் பாலை காப்பாற்ற "பிளாஸ்டிக்' போர்வை</u>

பந்தலூர் : பந்தலூர், கூடலூர் பகுதிகளில், மழையின் தாக்கத்திலிருந்து ரப்பர் பாலை காப்பாற்ற, பிளாஸ்டிக் போர்வை கொண்டு மூடப்பட்டுள்ளது. பந்தலூர், கூடலூர் பகுதிகளில் தேயிலை மற்றும் காபி தோட்டங்களில் ஊடுபயிராக, ரப்பர் விவசாயமும், மேற்கொள்ளப்படுகிறது. இங்கிருந்து எடுக்கப்படும் ரப்பர் பால், ஷீட்களாக மாற்றம் செய்து வயநாடு பகுதியில், விற்பனை செய்யப்படுகிறது. வயநாடு நிலவரப்படி நூறு கிலோ ரப்பர் சீட்டுகளுக்கு, 12 ஆயிரத்து 800 ரூபாய் விலையாக கிடைத்து வருகிறது. இதனால், ரப்பர் விவசாயம் நஷ்டம் அடையாமல் சென்று வருகிறது. தற்போது, தென்மேற்கு பருவமழை பெய்து வருவதால், மழையின் தாக்கத்திலிருந்து ரப்பர் பாலை காப்பாற்ற பிளாஸ்டிக் கொண்டு மூடப்பட்டு பால் சேகரிக்கப்படுகிறது. இந்த

காலநிலையால், தற்போது ரப்பர் விளைச்சல் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க பரிசு

பந்தலூர் : கொளப்பள்ளி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில், பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. செயலாளர் ரவிக்குமார் வரவேற்றார். நிர்வாக குழு தலைவர் கணேசன் தலைமை வகித்தார். துணை தலைவர் பாக்கியராஜ் முன்னிலை வகித்தார். இதில், கடந்த 2 ஆண்டுகளில் சங்கத்துக்கு அதிக லாபம் ஈட்டும் வகையில் பால் வழங்கிய உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.முதல் பரிசு அகஸ்டின், 2ம் பரிசு ராஜேந்திரன், 3ம் பரிசு பாலகிருஷ்ணன் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. "அனைத்து உறுப்பினர்களும் சங்கத்தின் வளர்ச்சிக்கு துணை நிற்க வேண்டும்' என, வலியுறுத்தப்பட்டது.நிகழ்ச்சியில் நிர்வாகிகள் பாக்கியநாதன், முத்தன், பழனிச்சாமி, கோபி, ஊழியர் புஷ்பநாதன் உள்ளிட்ட உறுப்பினர்கள் பங்கேற்றனர். கிருஷ்ணமேனன் நன்றி கூறினார்.

## குன்னூரில் தேன் விற்பனையில் "சுவை'

குன்னூர் : குன்னூர் சுற்றுப்புற பகுதிகளில் தேன் விற்பனை களை கட்டியுள்ளது. குன்னூர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் 30க்கும் மேற்பட்ட ஆதிவாசி கிராமங்கள் உள்ளன. இப்பகுதிகளை சேர்ந்த ஆதிவாசி மக்கள் பெரும்பாலும் வனப்பகுதிகளில் கிடைக்கும் பொருட்களை சேகரித்து விற்பனை செய்து வருகின்றனர். தேன், நாகை, தவுட்டு, சீதா, விக்கி, ஊசிக்காய் போன்றவற்றை அடர்ந்த வனப்பகுதிகளில் எடுத்து வந்து விற்பனை செய்து வருகின்றனர். தற்போது, குன்னூர் சுற்றுப்புற வனப்பகுதிகளில் எடுக்கப்படும் தேன், குன்னூர் மற்றும் மேட்டுப்பாளையம் பகுதிகளில் விற்பனை செய்யப்படுகிறது. "அரை லிட்டர் கொம்புதேன் 140, மலைதேன் 200, அடுக்கு தேன் 300, புற்றுதேன் 200 ரூபாய்' என, விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மருத்துவ குணம் வாய்ந்த இந்த தேன் அரை லிட்டர் பாட்டில்களில் வியாபாரிகளும், சுற்றுலா பயணிகளும் அதிகளவில்

வாங்கிச் செல்கின்றனர். இதுகுறித்து கல்லாறு பகுதியை சேர்ந்த ஆதிவாசி சோமைய்யா கூறுகையில்,""அடர்ந்த வனப்பகுதி, மலை உச்சி பகுதிகளுக்கு சென்று தேனை சேகரித்து வருகிறோம். லாபம் போதுமானதாக இல்லை.தேயிலை போன்று தேனுக்கும் அரசு அங்கீகாரம் கொடுத்து ஆதிவாசி மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த வேண்டும்,'' என்றார்.

## சூரிய ஒளி மின்சாரத்தில் "பம்பு செட்' விவசாயிகளுக்கு ரூ.4 லட்சம் மானியம்

கம்பம் : சூரிய ஒளி மின்சார பேனல்கள் அமைத்து தோட்டங்களில் விவசாயத்திற்கு "பம்பு செட்' இயக்குவதற்கு நான்கு லட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப் படுகிறது. மின் தட்டுப்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதில் இருந்து தப்பிக்க சூரிய ஒளி மின்சாரப் பயன்பாட்டிற்கு அரசு பல வழிகளில் மானியங்கள் மற்றும் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது. கம்பம் விவசாயத்துறை உதவி இயக்குநர் அசோகன் கூறியதாவது : "சூரிய ஒளி மின்சாரத்தில் வேளாண்மை' என்ற திட்டத்தில் விவசாயிகளுக்கு திறந்தவெளி கிணறு, ஆழ்துளை கிணறு மற்றும் தொட்டியில் தண்ணீர் நிரப்பி பாசனம் செய்வதற்கு விவசாய பொறியியல் துறையில் மானியம் வழங்கும் திட்டங்கள் பல உள்ளன. இதில் திறந்தவெளி கிணற்றுக்கு 1 லட்சத்து 17 ஆயிரத்து 512 ரூபாயும், ஆழ்துளை கிணற்றுக்கு ஒரு லட்சத்து நான்காயிரத்து 570 ரூபாயும், தொட்டி நீர் பாசனத்திற்கு ஒரு லட்சத்து 24 ஆயிரத்து 778 ரூபாய் பங்குத் தொகையாக விவசாயிகள் வழங்க வேண்டும்.அவ்வாறு வழங்கும் போது, அரசு மானியமாக அதிகபட்சம் 3 லட்சத்து 99 ஆயிரத்து 872 ரூபாய் வழங்கும். சூரிய ஒளி மின்சாரத்தில் தோட்டங்களில் 5 எச்.பி., மோட்டார் அமைப்பது குறித்து பயிற்சி அளிக்கப்படும். கம்பம் பகுதியில் திறந்தவெளி கிணறு பாசனத்திற்கு 2 விவசாயிகளுக்கும், ஆழ்துளை கிணறு பாசனத்திற்கு நான்கு விவசாயிகளுக்கும், தொட்டியில் நீர் நிரப்பி பாசன முறைக்கு ஒரு விவசாயிக்கும் மானியம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது தொட்டியில் நீர் நிரப்பி பாசனம் மற்றும் திறந்த வெளி கிணறு பாசனம் ஆகிய இரு முறைகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விருப்பம் உள்ள விவசாயிகள் கம்பம்

உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.மேலும் விபரங்களுக்கு 98943 85336ல் தொடர்பு கொள்ளலாம்.

## <u>பெரியாறு அணை நீர் பிடிப்பு பகுதியில் தொடர் மழை</u>

கூடலூர் : பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து, தமிழகப்பகுதிக்கு திறக்கும் நீரின் அளவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களாக பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், அணைக்கு நீர்வரத்து வெகுவாக அதிகரித்து, நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 120.60 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து 2211 கன அடியாக அதிகரித்துள்ளது. இதனால், தமிழகப்பகுதிக்கு திறக்கப்படும் நீரின் அளவும் அதிகரிக்கப்பட்டு 1167 கன அடியாக இருந்தது. நீர் இருப்பு 2747 மில்லியன் கன அடியாகும். தொடர்ந்து அணை நீர்பிடிப்பு பகுதியில் மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்புள்ளது.

## <u>முருங்கையில் நோய் தாக்குதல்</u>

வருஷநாடு : கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை, வருஷநாடு பகுதிகளில் முருங்கை மரங்களில் நோய் தாக்குவதால் இலைகள் உதிர்கிறது. கண்டமனூர், கடமலைக்குண்டு,மந்திச்சுனை, பாலூத்து, ஆத்தாங்கரைப்பட்டி, கொடுவிலார்பட்டி, அண்ணாநகர், அம்பசாமுத்திரம், கணேசபுரம், ராஜேந்திரநகர், வருஷநாடு, முருக்கோடை, மயிலாடும்பாறை, மூலக்கடை ஆகிய பகுதிகளில் 5 ஆயிரம் ஏக்கரில் முருங் கை சாகுபடி உள்ளது. தற்போது முருங்கை மரங்களில் கம்பளி பூச்சி தாக்குவதால் மரத்தில் உள்ள இலைகள் உதிர்ந்து விடுகிறது.இதனால் விவசாயிகள் சிரமப்பட்டு வருகின்றனர். தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் கூறுகையில், "முருங்கையில் உள்ள பூச்சிகளை கட்டுப்படுத்த "எக்காலக்ஸ்' பூச்சிக் கொல்லி மருந்தை ஏக்கருக்கு, 300 மில்லி தண்ணீரில் கலந்து தெளித்தால் இலைகள் உதிர்வதை கட்டுப்படுத்தாலம்,' என்றார்.

## <u>விதைகளை மறுமதிப்பீடு செய்யுங்க விவசாயிகளே</u>

மதுரை: காலாவதியான விதைகளை விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றம். எனவே விவசாயிகள் தங்களிடம் விதைகள் இருப்பின், அவற்றை மதிப்பீடு செய்வதற்கு, உரிய கட்டணத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.நேரடியாக தானியம், சிறுதானியம், பயறு வகை எண்ணெய் வித்துக்கள் ஒரு குவிண்டாலுக்கு ரூ. 30, மறுசுழற்சி செய்து மறுகொள்கலன்களில் பிடிக்க தானியங்கள், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்களுக்கு ரூ. 40 செலுத்த வேண்டும். இத்தகவலை விதை சான்று உதவி இயக்குனர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

## <u>விதைப்பண்ணையில் வேளாண் இயக்குனர்</u>

மேலூர் : மேலூர் அருகே தெற்குத்தெருவில் வேளாண் துறை சார்பில் பயிரிடப்பட்டுள்ள விதைப் பண்ணையை அலுவலர்கள் ஆய்வு செய்தனர். தெற்குத்தெருவில் ஐந்து ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள சணப்பு விதைப்பண்ணையில் இயக்குனர் ராஜேந்திரன் ஆய்வு செய்தார். இணை இயக்குனர் ஜெய்சிங் ஞானதுரை, மாநில திட்ட துணை இயக்குனர் ரவிச்சந்திரன், மத்திய திட்ட துணை இயக்குனர் சாராநாத் பாபு, மேலூர் உதவி இயக்குனர் சரவணன், துணை அலுவலர் ஆதீஸ்வரன் மற்றும் பலர் உடன் சென்றனர். இணை இயக்குனர் ஜெய்சிங் ஞானதுரை கூறியதாவது: -சணப்பு உரச்செடியை வயலில் மடக்கி உழவு செய்தால், ரசாயன உரசெலவு குறையும். உவர் நிலங்களில் சணப்பு செடியை பயிரிடுவதன் மூலம் மண் வளம் பாதுகாக்கப்பட்டு அதிக மகசூல் கிடைக்கும். சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். உரச்செடிகள் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும், என்றார்.

## <u>கைகொடுக்கும் தென்மேற்கு பருவமழை; பருத்தி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்</u>

உடுமலை : தென்மேற்கு பருவமழை கைகொடுத்து, பி.ஏ.பி., பாசனம் குறித்த நேரத்தில் துவங்க வாய்ப்புள்ளதால், நீண்ட இடைவெளிக்கு பிறகு, பருத்தி

சாகுபடியில், உடுமலை பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில், 20 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பில் பருத்தி பயிரிடப்பட்டு வந்தது. பி.ஏ.பி., மண்டல பாசனத்தில், தண்ணீர் பற்றாக்குறை, நோய்த்தாக்குதல்,விலை வீழ்ச்சி ஆகிய காரணங்களால், பருத்தி சாகுபடியை விவசாயிகள் கைவிட துவங்கினர்.கடந்த 2000க்கு பிறகு, பருத்தி சாகுபடி முற்றிலுமாக கைவிடப்பட்டு, மக்காச் சோள சாகுபடி பரப்பு பன்மடங்கு அதிகரித்தது. பருத்தி சாகுபடியை ஊக்குவிக்க மத்திய, மாநில அரசுகள் சார்பில், சிறப்பு திட்டங்கள் அறிவிக்கப்பட்டும், விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை.கடந்த 2008ல் சில ஸ்பின்னிங் மில் நிர்வாகத்தினர், ஒப்பந்த சாகுபடி முறையில் பருத்தி சாகுபடி மேற்கொள்ள விவசாயிகளுக்கு ஊக்கமளித்தனர். அந்தாண்டு, நூறு ஏக்கர் வரை பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. மிக நீண்ட இழை பருத்தி மற்றும் நீண்ட இழை பருத்தி ரகங்களுக்கு நல்ல விலை கிடைக்கத் துவங்கியது, விவசாயிகளை பருத்தி சாகுபடியை நோக்கி திரும்பச் செய்தது.மிக நீண்ட இழை பருத்திக்கு குவிண்டாலுக்கு 9,000 ரூபாய், நீண்ட இழை பருத்திக்கு 6,000 ரூபாய் விலை கிடைத்தது. நிலையான விலை காரணமாக, விவசாயிகள் லாபம் பெற்றனர். இவ்வாறு, படிப்படியாக ஆண்டுதோறும் அதிகரித்து வந்த பருத்தி சாகுபடி பரப்பு இந்தாண்டும் கணிசமாக உயர வாய்ப்புள்ளது.உடுமலை பகுதியில், பரவலாக தென்மேற்கு பருவமழை பெய்து வருகிறது. இம்மழையை பயன்படுத்தி, விருகல்பட்டி, அடிவள்ளி, அந்தியூர் உள்ளிட்ட பகுதிகளில், பருத்தி நடவு பணியை விவசாயிகள் துவக்கியுள்ளனர். பி.ஏ.பி., இரண்டாம் மண்டல பாசனத்துக்கு திருமூர்த்தி அணையில் இருந்து இம்மாத இறுதியில் தண்ணீர் திறக்க வாய்ப்புள்ளதால், பருத்தி சாகுபடிக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்படாது. மின்தடை குறைந்து ஸ்பின்னிங் மில்கள் சீராக இயங்கத் துவங்கியுள்ளதால், பருத்தி கொள்முதல் விலையும் நிலையாக இருக்கும் என விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.

தினகரன்

## நீர்வரத்து 20 ஆயிரம் கனஅடியை தாண்டியது

## மேட்டூர் அணை நீர்மட்டம் 85 அடியை நெருங்கியது

மேட்டூர்: கர்நாடக அணைகளில் இருந்து மீண்டும் உபரி நீர் திறக்கப் பட்டுள்ளதால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு விநாடிக்கு 20,262 கனஅடியாக அதிகரித்துள்ளது. இதனால், அணையின் நீர்மட்டம் 85 அடியை நெருங்கியுள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழையால், கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி அணை நிரம்பி உள்ளது. கிருஷ்ணராஜசாகர் அணை நிரம்பும் நிலையில் உள்ளது. இதனால் கடந்த 18ம் தேதி முதல், இந்த அணைகளில் இருந்து உபரி நீர் காவிரியில் திறந்துவிடப்பட்டு வருகிறது. உபரி நீர் வரத்தால் மேட்டூர் அணையின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. கடந்த வாரத்தில் மேட்டூர் அணைக்கு 40 ஆயிரம் கனஅடி அளவிற்கு தண்ணீர் வந்ததால் நீர் மட்டம் மளமளவென உயர்ந்தது. பின்னர், மழை தீவிரம் குறைந்து கர்நாடக அணைகளில் தண்ணீர் திறப்பு குறைக்கப்பட்டது. தற்போது மீண்டும் கனமழை கொட்டுவதால் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளில் இருந்து நேற்று முன்தினம் முதல் 40 ஆயிரம் கன அடிக்கும் அதிகமாக நீர் திறக்கப்பட்டு வருகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர் வரத்து படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது. நேற்று காலை 8 மணி நிலவரப்படி, மேட்டூர் அணைக்கு விநாடிக்கு 20,262 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து காவிரி ஆற்றில் 6801 கனஅடி நீர் திறக்கப்பட்டது. நீர் மட்டம் 84.19 அடியாக இருந்தது. நீர் இருப்பு 46.26 டிஎம்சியாகவும் உள்ளது. நீர்மட்டம் ஒரே நாளில் 1 அடி உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது. தற்போது, நீர்மட்டம் 85 அடியை நெருங்கியுள்ளதால், டெல்டா பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஒகேனக்கல்லில் வெள்ளப்பெருக்கு: கர்நாடக-தமிழக எல்லையான பிலிகுண்டுலுவில் நேற்று காலை எடுக்கப்பட்ட அளவீட்டின்படி காவிரி ஆற்றில் விநாடிக்கு 30 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. இதன்காரணமாக மெயின் அருவி, ஐவர்பாணி, சினிபால்ஸ் உள்ளிட்ட இடங்களில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

**<u>செப்டம்பர், அக்டோபரில் தக்காளி விலை உயரும்: வேளாண் மையம் கணிப்பு</u>**




திருச்சி: செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் தக்காளி விலை உயரும் என்று வேளாண் மையம் கணித்துள்ளது. வறட்சி, பருவமழை தவறியதால் தக்காளி சாகுபடி குறைந்துள்ளது. கர்நாடகா மாநிலம் கோலார் சந்தையில் கொல்கத்தா மற்றும் ஒரிசா வியாபாரிகள் தக்காளி கொள்முதல் செய்ய தொடங்கியிருப்பதால் அங்கிருந்து கோவை மொத்த சந்தைக்கு தக்காளி வரத்து குறைந்துள்ளது. இதனால் தக்காளி விலை அதிகரித்துள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். தக்காளி விலை நிலவரம் குறித்து வேளாண் சந்தை

நுண்ணறிவு மற்றும் வணிக மேம்பாட்டு மைய துணை இயக்குநர் சந்திரசேகரன் கூறியதாவது: ஜுலை முதல் அக்டோபர் வரையான காலகட்டங்களில் தக்காளி விலை குறைந்து காணப் படும். மாறாக தற்போது கர்நாடக மாநிலம் மைசூர் மற்றும் கோலார் பகுதிகளில் இருந்து கோவை மொத்த சந்தைக்கு வரத்து குறைந்துள்ளதால் விலை அதிகரிக்கிறது. தற்போது மொத்த சந்தைகளில் தக்காளி விலை தரத்திற்கேற்ப கிலோ ரூ.25முதல் 30 வரை உள்ளது. வரும் ஆகஸ்ட் - அக்டோபர் மாதங்களில் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த 11 வருடங்களில் கோவை, ஒட்டன்சத்திரம், ஒசூர் மற்றும் தலைவாசல் உழவர் சந்தைகளில் நிலவிய தக்காளி விலை விவரங்கள் மற்றும் வர்த்தக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில், தக்காளி விலை அடுத்து வரும் 2 மாதங்களில் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. மேலும் தக்காளியின் பண்ணை விலை செப்டம்பர், அக்டோபரில் கோவை மற்றும் ஒசூரில் கிலோவிற்கு ரூ.20-22வரையும், ஒட்டன் சத்திரம் சந்தையில் கிலோவிற்கு ரூ.16-18 வரையும் மற்றும் தலைவாசல் சந்தையில் கிலோவிற்கு ரூ.18-20 வரையும் இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்த பண்ணை விலை அடுத்துவரும் 3 மாத பருவமழைக்கு ஏற்ப மாறுவதற்கு வாய்ப்புள்ளது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தங்களது ஆடிப்பட்ட தக்காளி விதைப்பை மேற்கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# <u>மஞ்சளுக்கு கூடுதல் விலை</u>




திருச்செங்கோடு: நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு வேளாண் கூட்டுறவு சங்கத்தில் மஞ்சள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்தில் ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 2,500 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு வந்தது. இதை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் உள்ளிட்ட பல்வேறு பகுதியிலிருந்து ஏராளமான வியாபாரிகள் வந்திருந்தனர். இந்த ஏலத்தில் ரூ.1 கோடிக்கு மஞ்சள் விற்பனையானது. விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.6,209 முதல் 8,119 வரை விற்பனையானது, கிழங்கு ரகம் ரூ.5,709 முதல் ரூ.6,739 வரை விலை போனது. பனங்காளி ரகத்திற்கு ரூ.8,500 முதல் 10,599 வரை கிடைத்தது. மஞ்சள் வரத்து ஈரோடு மார்க்கெட்டை விட அதிகமாக இருந்தது. விலையும் குவிண்டாலுக்கு ரூ.300 அதிகம் கிடைத்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

<u>**நேந்திரன் வாழைக்கு அதிக விலை: வேளாண்மை பல்கலை கணிப்பு**</u>




கோவை: தமிழ்நாட்டில், நேந்திரன் வாழை கோவை, ஈரோடு, திருச்சி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பயிரிடப்படுகின்றது. இந்நிலையில், வரும் காலங்களில் நேந்திரன் விலை நிலவரங்களை விவசாயிகள் அறிந்து கொள்ளும் விதத்தில், வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மைய அலுவலகம் கடந்த 6 வருடங்களில் கோவை உழவர் சந்தையில் நிலவிய நேந்திரன் விலை விவரங்கள் மற்றும் குமரன் மொத்த சந்தையில் வர்த்தக ஆய்வுகளை மேற்கொண்டது. இந்த ஆண்டு ஓணம் பண்டிகை விற்பனைக்காக தமிழக விவசாயிகள் கடந்த வருடத்தில் நடவை மேற்கொண்டுள்ளனர். தற்போது, கோவை உழவர் சந்தையில் ஒரு கிலோ ரூ.48 வரை விற்பனை செய்யப்படுகிறது. கடந்த மாதம் காற்றின் வேகம் காரணமாக காரமடை மற்றும் அன்னூர் பகுதிகளில் பெரும்பாலான மரங்கள் சேதமடைந்த நிலையில் வரத்து குறைவாக உள்ளது. வர்த்தக ஆய்வுகளின் முடிவின்படி நேந்திரன் விலை வரும் ஆகஸ்ட் முதல் அக்டோபர் மாதம் வரை ஏறுமுகமாக இருக்கும். அதன்

அடிப்படையில் அறுவடையின் போது நேந்திரன் விலை கிலோவிற்கு ரூ. 55 முதல் 60 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

## <u>முட்டை விலை 10 காசு எகிறியது</u>




நாமக்கல்: நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில், பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் கலந்து கொண்டு முட்டை விற்பனை நிலவரம் பற்றி ஆலோசித்தனர். முட்டை விலையில் 10 காசுகள் அதிகரிக்க முடிவு செய்யப்பட்டது. அதை தொடர்ந்து ஒரு முட்டையின் பண்ணைகொள்முதல் விலை 260 காசிலிருந்து 270 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. ரம்ஜான் பண்டிகை முடிந்துள்ளதால், முட்டை விற்பனை தமிழகத்தில் அதிகரித்துள்ளது. இதனால் முட்டை விலை உயர்த்தப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

## 20 ஆடுகள் வளர்த்தால் அதிக லாபம் பெறலாம் வம்பனில் 7ம் தேதி பயிற்சி முகாம்

ஆலங்குடி, : ஒவ் வொரு விவசாயியும் குறைந்தபட்சம் 20 ஆடுகள் வளர்த்தால் அதிக லாபம் பெறலாம் என்றும், இதுகுறித்த சிறப்பு பயிற்சி முகாம் இம்மாதம் 7ம் தேதி வம்பனில் உள்ள வேளாண் அறிவியல் மையத்தில் நடை பெற உள்ளதாகவும் அதன் தலைவர் ஞானமலர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: புதுக்கோட்டை மாவ ட்டம், ஆலங்குடி அடுத்த வம்பனில் இயங்கி வரும் வேளாண் அறிவியல் மைய த்தில் அதிக லாபம் தரும் பரண்மேல் ஆடு வளர்ப்பு குறித்த ஒரு நாள் சிறப்பு பயிற்சி முகாம் இம்மாதம் 7ம் தேதி நடை பெறுகிறது. மழை சரிவரப் பெய்யாத நிலையில், விவசாயிகள் விவசாயம் சார்ந்த தொழில்களையே செய்ய ஆர்வமாக உள்ளனர். இவ்வகையில் தளச்சேரி என்னும் பரண் மேல் ஆடு வளர்ப்பு முறை மூலமாக கூடுதல் லாபம் கிடைக்கும். இம்முறையில் ஆடு வளர்த்தல் கேரள மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டாலும், இது தமிழக பருவ நிலைக்கும், சூழலுக்கும் நல்ல முறையில் வளரும் இயல்புடையதாகும். ஒரு விவசாயி குறைந்தபடசம் 20 ஆடுகள் வளர்ப்பதன் மூலம் அதிக லாபம் பெறலாம். இருப்பினும், 20 பெண் ஆடுகளுக்கு ஒரு கிடா வீதம் இருக்க வேண் டும். மேலும், தேவைக்கு ஏற்ப 2 அல்லது 3 கிடா இருக்கலாம் என்று கால்நடை விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இவ் வாறு பரண்மேல் வளர்க்கும் இந்த ஆடுகள் 6 மாதங்களில் 18 முதல் 20 கிலோ எடை அளவு வள ரும் தன்மைக் கொண் டது. மேலும், இரண்டு ஆண்டு இடைவெளியில் 3 முறை குட்டிகளை பெறும் இயல்புடையதாக இருப்பதால் நிச்சயமாக லாபம் உண்டு. புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகை யில் வம் பன் வேளாண்மை அறிவியல் மையத்தில் இதுகுறித்த சிறப்பு பயிற்சி முகாம் இம்மாதம் 7ம் தேதி நடை பெற உள்ளது. எனவே, ஆர்வமுள்ள விவசாயிகள் இதில் பங்குபெற்று பயனடையலாம் என்றார்.

**<u>சிறு குறு விவசாயிகள் சிறுதானிய உற்பத்தி மூலம் வாழ்வாதாரத்தை பெருக்கலாம் வேளாண் முகாமில் தகவல்</u>**

அன்னவாசல், : சிறு குறு விவசாயிகள், சிறுதா னிய உற்பத்தி மூலம் வாழ்வாதாரத்தைப் பெருக்க லாம் என்று புதுக் கோட்டை மாவட்டம், அன்ன வாசல் அடுத்த கீழக்குறிச்சியில் நடைபெற்ற வேளாண் பயிற்சி முகாமில் தெரிவிக்கப்பட்டது. சிறுதானியங்கள் உற் பத்தி மூலம், உணவு உற்பத்தி மற்றும் வாழ்வாதாரத்தைப் பெருக்குவது குறித்து சிறு குறு விவசாயிகளுக்கு புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் அடுத்த கீழக்குறிச்சியில் உள்ள ஜீ.வி.என். பயிற்சி மையத்தில் சிறப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது. நபார்டு வங்கி, ஜீவிஎன் அறக்கட்டளை ஆகியவற்றின் சார்பில் நடை பெற்ற இம்முகாமை பாரத ஸ்டேட் வங்கியின் அன்னவாசல் கிளை மேலாளர் ஆண்டோலெனார்டு குத்து விளக்கேற்றித் துவக்கிவைத்தார். புதுக்கோட்டைமாவட்ட நபார்டு வங்கி வளர்ச்சி மேலாளர் சோமசுந்தரம் சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், சிறுதானிய உற்பத்தி மூலம் வாழ்வாதாரத்தை விவசாயிகள் பெருக்கிக்கொள்ளலாம் என்றார். இதைத் தொடர்ந்து, சிறுதானிய உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு அரசுத் துறை மூலம் கிடைக்கக்கூடிய மானியம், திட்டதில் பயன்பெறும் விவசாயிகளுக்கு சிறுதா னிய விதைகள் ஆகியன வழங்கினார். பாரதிதாசன் பல்கலைக்கழகம் முனைவர் லலிதா சிறு தானிய உற்பத்தி குறித்தும் மற்றும் சாகுபடி நுட்பங்கள் குறித் தும் விளக்கிக் கூறினார். இதைத் தொடர்ந்து பேசிய பாரதிதாசன் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் சங்கர் கருத்துரையாற்றினார். மேலும் விதை நேர்த்தி, சிறுதானிய ரகங்கள், நீர் சிக்கனம், மானாவாரியில் சிறு தானிய உற்பத்தியில் மகசூல் பெருக்கத்துக்கு உரிய தொழில்நுட்பம், விதை வங்கி உருவாக்குதல், மண் மாதிரி பரிசோதனை எடுத்தல், மீன் அமிலம், முட்டை அமிலம், பூச்சி விரட்டி, மண் புழு உரத்தின் மகத்துவம் விவசாயிகளுக்கு அரசுத் துறையின் மூலம் கிடைக்க கூடிய மானியம், வேளாண் துறையின் மூலம் கிடைக்கும் இடுபொருட்கள் ஆகியன குறித்து பயிற்சி அளித்தார். அன்னவாசல் உதவி வேளாண் அலுவலர் அமலி

ஜாஸ்மின், முன்னோடி விவசாயிகள் கோவிந்தராஜ், காமராசு, மருதையப்பன், ஆகியோர் பயிற்றுநர்களாகப் பங்கேற்று விளக்கிக் கூறினர். இதில் அன்னவாசல், குண்ணான் டார் கோவில் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த சிறு குறு விவசாயிகள் திரளாகப் பங்கேற்றனர். முன்னதாக, ஜீ.வி.என். அறக்கட்டளை இயக்குநர் சுப்பிரமணியன் வரவேற் றார். முடிவில் ஜீ.வி.என். அறக்கட்டளை திட்ட ஒருங்கிணைப்பாளர் தனபாக்கியம் நன்றி கூறினார்.

**<u>ஆடிப்பெருக்கு விழா காவிரி, வெண்ணாற்றில் தண்ணீர் திறப்பு</u>**

தஞ்சை, : ஆடிப்பெருக்கு விழாவுக்காக கல்லணையிலிருந்து காவிரி, வெண்ணாற்றில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. கல்லணை கால்வாயில் தண்ணீர் திறந்துவிடாத தால் மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். காவிரி கரைகளில் ஆடிப்பெருக்கு விழா நாளை கொண்டாடப்படுகிறது. பக்தர்கள் நீராடி ஆடிப்பெருக்கை கொண்டாடுவதற்காக மேட்டூர் அணையிலிருந்து கடந்த 27ம் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. வினாடிக்கு 6,000 கன அடி வீதம் திறந்து விடப்பட்ட தண்ணீர் நேற்று மாலை 4 மணிக்கு கல்லணை வந்து சேர்ந்தது. இரவு 8 மணி நிலவரப்படி அணையில் 5 அடி நீர்மட்டம் உயர்ந்தது. இதையடுத்து காவிரியில் வினாடி க்கு 2,000 கன அடி வீதமும், வெண்ணாற்றில் 1,500 கன அடி வீதமும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் திறந்துவிட்டனர். இத்தண்ணீர் இன்று இரவுக்குள் கடைமடையை தொடும் என்று எதிர்ப்பார்க்கப்படுவதாக பொதுப் பணித்துறை வட்டாரங்கள் தெரிவித்தன. ஆண்டுதோறும் ஆடிப்பெருக்குக் காக காவிரி, வெண்ணாறு, கல்லணை கால்வாயில் குறைந்தபட்ச தண்ணீர் திறந்து விடப் படும். ஆனால் இந்தாண்டு காவிரி, வெண்ணாற்றில் மட்டும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கல்லணை கால்வாயில் தண்ணீர் திறந்துவிடவில்லை. இதனால் தஞ்சை நகரில் கல்லணை கால்வாயில் ஆடிப்பெருக்கன்று தண்ணீர் இல்லாத நிலை ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. இதனால் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இதுகுறித்து பொதுப்பணித்துறை கீழ்காவிரி வட்ட கண்காணிப்பு பொறியாளர் சம்பத்திடம் கேட்டபோது, மேட்டூரிலிருந்து வரக்கூடிய தண்ணீரை பொறுத்து காவிரி, வெண்ணாற்றில் பிரித்து தண்ணீர் திறந்து

விடப்படும். கல்லணை கால்வாயில் தண்ணீர் திறந்துவிடவில்லை. ஏனென் றால் தூர்வாரும் பணிகள் மற்றும் ஷட்டர் பழுதுபார்க்கும் பணி நடந்து வருகிறது. தண்ணீர் திறந் தால் இப்பணிகள் பாதிக்கப்படும். பிறகு சாகுபடிக்கு தண்ணீர் திறக்கும்போது கடைமடைக்கு சென்று சேருவதில் சிரமம் உண்டா கும். எனவே தான் கல்லணை கால்வாயில் தண்ணீர் திறந்துவிடவில்லை. ஆடிப்பெருக்கு முடிந்து 3 நாட்களுக்குள் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்படும் என்றார். இந்நிலையில் நேற்று மாலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 82 அடியாக இருந் தது. அணைக்கு வினாடிக்கு 16,714 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 6,819 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டு வருகிறது.

## ஆலங்குடி அருகே விவசாய குழுக்களுக்கு வட்டியில்லா கடன்

ஆலங்குடி, : புதுக் கோட்டை மாவட்டம், ஆலங்குடி அடுத்த கொத்தமங்கலம் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் 6 விவ சாய கூட்டு பொறுப்பு குழுக்களுக்கு, வட்டி இல்லா கடனாக ரூ. 8.64 லட்சம் வழங்கப்பட்டது. இதையொட்டி, நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கூட்டுறவு சங்கத் தலைவர் சேகர் தலைமை வகித்து இந்த கடனுதவிக்கான காசோலை களை வழங்கினார். நிகழ்ச்சியில் கூட்டுறவு சங்கச் செயலாளர் மணி மேகலை, சங்கத் துணைத் தலைவர் ராமநாதன், இயக்குநர்கள் ஆனந்தன், பாலகிருஷ்ணன், லோகநாதன், ரத்தினம், பாமா, சுமதி, பூமதி, திருப்பதி, மாசிலா மணி மற்றும் சங்க ஊழியர்கள் மற்றும் ஊராட்சி துணைத் தலைவர் ராணி சங்கர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## வெங்காயத்தை விட வெங்காயத்தாளில் 3 மடங்கு லாபம் பயிற்சி முகாமில் தகவல்

கொள்ளிடம், : நாகை மாவட்டம் கொள்ளிடம் அருகே உள்ள எருக்கூரில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக இறுதியாண்டு வேளாண் மாணவிகளின் 3 மாதங்கள் தங்கி பயிற்சி பெறும் ஊரக வேளாண் பணி அனுபவ

துவக்க விழா நடைபெற்றது. மாவட்ட ஊராட்சிக் குழு துணை தலைவர் ஜெய ராமன் தலைமை தாங்கி பேசுகையில், ‘கொள்ளிடம் சந்தபடுகை கிராமத்திலிருந்து வெங்காய தாள், சென்னையில் உள்ள பிரபல ஓட்டலுக்கு கொண்டு செல்லப்படுகிறது. பல உணவு விடுதிக ளில் பாஸ்ட்புட் உணவாக பயன்படுத்தப்படுகிறது. வெங்காய சாகுபடி அறு வடை செய்ய 90ல் இருந்து 100 நாட்கள் வரை ஆகிறது. ஆனால் பயிரிட்ட 40வது நாளிலேயே வெங்காயதாள் அறுவடையாகிறது. இதில் வெங்காயத்தை முழுமையாக சாகுபடி செய்து அறுவடை செய்தால் கிடைக்கும் லாபத்தை விட 3 மடங்கு அதிகமாகவும், மிகக் குறைந்த காலத்தில் லாபம் ஈட்டவும் முடிகிறது. வெங்காயத்தாள் ஒரு சத்து மிகுந்த உணவாக பயன்படுத்தப்படுகிறது. வெங்காயத்தாள் சமையலில் கூட்டு செய்யவும், அடை மற்றும் வடை போன்ற பலவித உணவு பொருள் தயாரிப்பதற்கும் பயன்படுகிறது என்றார். மாணவி வைஷ்ணவி வரவேற்றார். ஒன்றியக்குழு தலைவி மீனா, ஊராட்சித் தலைவர் முத்துகுபேரன் முன்னிலை வகித்தனர். அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்க துறை உதவி பேராசிரியர்கள் சண்முகராஜ், முத்துக்குமார், கொள்ளிடம் வேளாண் அலுவலர் சதீஷ்குமார், வேளாண் உதவி அலுவலர் மகேஷ், தலைமை ஆசிரியர் அலெக்ஸ்சாண்டர் மற்றும் பலர் கலந்து கொண்டனர். மாணவி விபிதா நன்றி கூறினார்

## <u>வேளாண் அறிவியல் நிலையத்தில்</u>

கொள்ளிடம், : கொள்ளிடம் அருகே உள்ள நல்லூர் உப்ப னாறு வடிகால் 8 கிலோ மீட்டர் தூரம் உடையதா கும். இந்த உப்பனாற்றை ரூ.9.5 லட்சம் மதிப்பீட்டில் துர்வாரும் பணி துவக்கி நடைபெற்று வருகிறது. நரிமுடுக்கு என்ற இடத்திலி ருந்து செம்மங்காடு வரை 8 கிலோமீட்டர் தூர நீளம், 15 முதல் 20 மீட்டர் வரை அகலம் கொண்ட இந்த ஆறு முதல் கட்டமாக 4 கிலோமீட்டர் தூரம், இரண்டாம் கட்டமாக

4 கிலோமீட்டர் தூரம், 10 நாட்களுக்குள் தூர்வாரி முடிக்கப்படும் என்று பொதுப்பணித்துறை உதவி பொறியாளர் சிவகுருநாதன் தெரிவித்தார்.

## வேளாண் இயந்திரங்களை மானியத்தில் பெற்று பயன்பெறலாம்

அரியலூர்,: வேளாண் இயந்திரங்களை மானியத்துடன் பெற்று விவசாயிகள் பயன்பெறலாம் என்று கலெக்டர் தெரிவித்தார். அரியலூர் மாவட்டம் வேளாண்மை பொறியியல் துறையின் சார்பில் பல் வேறு வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகிறது. அரி யலூர் அடுத்த வாரணவாசி மல்லூர் கிராமத்தில் ஆழம் குறைந்த குழாய் கிணறு அமைக்கும் பணி மற்றும் லேசர் மூலம் நிலம் சமப்படுத்துல், வைக்கோல் கட்டும் இயந்திரங்களை மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் ஆய்வு செய்தார். பின்னர் அவர் தெரிவித்ததாவது: அரியலூர் மாவட்டத்தில் சிறு பாசனத்திட்டத்தின் கீழ் விவசாயிகளின் விவசாய நிலங்களில் ஆழம் குறைந்த குழாய் கிணறு அமைத்து கொடுப்பதற்கு 3 எண்கள் கைத்துளைக்கருவி உள்ளது. இதற்கு குறைந்த வாடகையாக ஒரு மீட்டர் ஆழத்திற்கு ரூ.30 வாடகையாக வசூலிக்கப்படுகிறது. இதனை இயக்குவதற்கு தேவையான கூலி ஆட்களை விவசாயியே தனது சொந்த செலவில் ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். இவ்வகையான அழம் குறைந்த குழாய் கிணறுகள் மணல், களிமண், வண்டல் படிந்த நில அமைப்பு உள்ள இடங்களில் மட்டுமே அமைக்க இயலும். இந்த கைத்துளை கருவி மூலம் குழாய் கிணறுகள் அமைத்தவுடன் கேசிங் பைப்பினை வெளியே எடுப்பதற்குமுன் சிறு சிறு துவாரங்கள் உள்ள குழாய்களை இறக்கி இக்குழாயின் வெளிச்சுற்றினை சுற்றி சுமார் 4 செ.மீ அகலத்திற்கு கூழாங்கற்களை கொண்டு நிரப்பப்பட வேண்டும். இக்கருவி மூலம் அதிக பட்சமாக 150 அடி ஆழம் வரை குழாய் கிணறுகள் அமைக்கலாம். அரியலூர் மாவட்டத்தில் 2014-15ம் நிதி ஆண்டிற்கு நவீன வேளாண் இயந்திரங்களின் செயல்பாடுகள் மற்றும் தொழில் நுட்பங்களை விவசாயிகள் அறிந்து கொண்டு அதனை கடைபிடித்து விவசாய உற்பத்தியினை அதிகரித்து கூடுதல் லாபம் ஈட்டவும், கூலி ஆட்கள் பற்றாக்குறையினை போக்கவும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 2014-15ம் நிதி ஆண்டிற்கு இம்மாவட்டத்திற்கு லேசர் மூலம் நிலம்

சமப்படுத்துதல், வைக்கோல் கட்டு கட்டுதல், அகல கரை அமைத்தல், மரக்கன்றுகள் நடவதற் கான குழிகள் தோண்டுதல் போன்ற செயல் விளக்கம் செயல்படுத்த ஒரு செயல் விளக்கத்திற்கு ரூ.3 ஆயிரம் வீதம் 8 எண்களுக்கு ரூ.24 ஆயிரம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தின் விவசாயிகள் தங்களுக்கு தேவையான வேளாண் இயந்திரங்களை அரசு மானியத்துடன் பெற்று தங்கள் நிலங்களில் வேளாண் இயந்திரங்களை பயன்படுத்தி விவசாயம் செய்து கூலி அட்கள் செலவினை குறைத்து உற்பத்தியினை பெருக்கி அதிக வருமானம் பெற்று பயன் பெற வேண்டும் என்றார்.ஆய்வின்போது வேளாண் இணை இயக்குனர் குணசேகரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் விஸ்வநாதன், செயற்பொறியாளர் ஆரோக்யசாமி, உதவி செயற்பொறியாளர் மோகனகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## <u>காய்கறி செடியில் நவீன களையெடுக்கும் கருவி</u>

ஜெயங்கொண்டம், : ஜெயங்கொண்டம் அருகே உள்ள பிச்சனூர் கிராமத்தில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் காய்கறி செடியில் நவீனமுறையில் களையெடுக்கும் கருவி மற்றும் மினி டிராக்டர் மூலம் களையெடுப்பது குறித்து செயல் விளக்கம் செய்து காண்பிக்கப் பட்டது. வேளாண்மையை நவீனப்படுத்தும் விதமாக பிச்சனூர் கிராமத்தை சுற்றியுள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் நவீன களையெடுக்கும் கருவி, மினி டிராக்டர் மூலம் களையெடுப்பது ஆகியவற்றின் மூலம் நேரடி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. வேளாண்மை பொறியியல் துறையை சேர்ந்த பொறியாளர்கள் கலைமணி, நாகநாதன், ராஜாராம், நடராஜன் ஜெயவேலு ஆகியோர் செயல் விளக்கம் அளித்தனர். இதில் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# பில்லூர் அணையில் தண்ணீர் திறப்பு: பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு கரையோர பகுதி மக்களுக்கு எச்சரிக்கை



பில்லூர் அணையின் 4 மதகுகள் வழியாக தண்ணீர் திறக்கப்பட்டு உள்ளதால் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. எனவே கரையோர பகுதி மக்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

## பில்லூர் அணை

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையத்தை அடுத்த மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் பில்லூர் அணை உள்ளது. இந்த அணையின் நீர்மட்ட உயரம் 100 அடி. கடந்த சில நாட்களாக நீலகிரி மாவட் டத்தில் பலத்த மழை பெய்து வருவதால் பில்லூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. நேற்று முன்தினம் காலை 10 மணி நிலவரப்படி அணைக்கு 10 ஆயிரம் கனஅடி தண்ணீர் வரத்தொடங்கியது. இதனால் 88.25 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்து மாலை 5 மணிக்கு 95 அடியை எட்டியது. எனவே அணையில் இருந்து வினாடிக்கு 6 ஆயிரம் கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டது. இந்த நிலையில் நேற்று

முன்தினம் இரவு அணை மீண்டும் நிரம்பியது. அணையின் நீர்மட்ட உயரம் 98 அடியை எட்டியது. இதனால் அணையின் பாதுகாப்பு கருதி நேற்று அதிகாலை 3 மணி அளவில் 4 மதகுகள் வழியாக தண்ணீர் திறந்து விடப்பட்டது.

<u>வெள்ள அபாய எச்சரிக்கை</u>

இதனால் பவானி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பவானி அம்மன் கோவிலையும், விளை யாட்டு மாரியம்மன் கோவிலையும் வெள்ளம் சூழ்ந்துள்ளது.

இது குறித்து தகவல் அறிந்த மேட்டுப்பாளையம் தாசில்தார் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட திட்டக் குழு உறுப்பினர் வெள்ளியங்கிரி ஆகியோர் பவானி ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுவதை பார்வையிட்டனர். இது தொடர்பாக மேட்டுப்பாளையம் தாசில்தார் கிருஷ்ணமூர்த்தி ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:– பில்லூர் அணை மீண்டும் நிரம்பி உள்ளதால் அணையின் 4 மதகுகள் வழியாக தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. இதனால் பவானி ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இதனால் வெள்ள அபாயம் ஏற்பட்டு உள்ளது. எனவே ஆற்றின் கரையோர பகுதி மற்றும் தாழ்வான பகுதியில் உள்ள பொதுமக்கள் பாதுகாப்பு கருதி மேடான பகுதிக்கு செல்ல வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது. இந்த நிலையில் நேற்று காலை முதல் அணைக்கு வினாடிக்கு 6 ஆயிரம் கன அடி தண்ணீர் வரத்தொடங்கியது. இதையடுத்து அணையின் 4 மதகுகள் வழியாக தண்ணீர் வெளியேற்றுவது நிறுத்தப்பட் டது. இதனால் தற்போது அணையின் நீர்மட்ட உயரம் 97.5 அடியாக உள்ளது.

**சொட்டு நீர் முறையில் வெங்காயம் பயிர் செய்தால் ஏக்கருக்கு 18 டன் மகசூல் கிடைக்கும் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் தகவல்**



சொட்டு நீர் முறையில் வெங்காயம் பயிர் செய்தால் ஏக்கருக்கு 18 டன் மகசூல் கிடைக்கும் என்று தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் தெரிவித்தார். வெங்காயம் சாகுபடி உணவில் பல நன்மைகளை தரும் வெங்காயத்தை கடலூர் மாவட்டம் கம்மாபுரம் வட்டாரங்களில் விவசாயிகள் பயிரிட தொடங்கியுள்ளனர். கம்மாபுரம் பகுதிகளில் மணற்பாங்கான மண், செம்மண், கரிசல் மண்வகைகள் அதிகம் காணப்படுவதால் அதற்கேற்ற தோட்டக்கலை பயிர்களான முந்திரி, காய்கறி பயிர்கள், மலர்வகை பயிர்கள், எண்ணெய்வித்து பயிர்களை அவ்வபோது விவசாயிகள் பயிரிடுவது வழக்கம். தற்போது 10 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் தோட்டக்கலை பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. விருத்தாசலம் வட்டாரத் திற்குட்பட்ட எடச்சித்தூர், கர்ணத்தம் பகுதிகளில் சொட்டு நீர் பாசன முறையிலும், கம்மாபுரம் வட்டாரத்திற்குட்பட்ட பவழங்குடி, சிறுவரப்பூர், பெருவரப்பூர், கோட்டுமுளை, ஒட்டிமேடு, பெருந்துரை பகுதிகளிலும் விவசாயிகள் வெங்காயம் பயிரிடுவதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். வெங்காயம் சாகுபடி பணிகள்

குறித்து கம்மாபுரம் தோட்டக்கலைதுறை உதவி இயக்குநர் மணிமொழி கூறியதாவது:- விருத்தாசலம், கம்மாபுரம் வட்டாரங்களில் வைகாசி பின்பட்டத்தில் கோ.5 என்ற வெங்காய ரகத்தை விவசாயிகளுக்கு பரிந்துரை செய்துள்ளோம். தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஒரு கிலோ ரூ.2 ஆயிரத்து 200 மதிப்புள்ள விதைகளை முழு மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளோம். விதைகளை நடவு செய்யும் போது பாஸ்போபாக்டீரியா, அசோஸ்பைரில்லம் போன்ற உயிர் உரங்களை அடியுரமாக இட்டு நடவு செய்ய வேண்டும். பயிரின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு 19.19.19 என்ற தழை, சாம்பல், மணிச்சத்து உரத்தை பயன்படுத்தி உரநிர்வாகம் செய்ய வேண்டும். பயிர் தூர் பிடிக்கும் நிலையில் இலை பேன் தாக்கி பாக்டீரியா நோய்கள் ஏற்படலாம். இதனை தடுக்க ரோகார் என்ற மருந்தினை ஒரு மில்லி லிட்டருக்கு ஒரு லிட்டர் தண்ணீர் வீதம் கலந்து பூச்சி நோய்களை கட்டுபடுத்தலாம். 18 டன் மகசூல் கிடைக்கும் பூச்சி நோய் தாக்கப்படும் அபாயம் தெரிந்தால் உடனடியாக தோட்டக்கலை துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம். 90 நாள் பயிரான வெங்காயத்தினை சொட்டு நீர் முறையில் பயிர் செய்தால் ஏக்கருக்கு 18 டன் மகசூலும், வழக்கம் போல பயிர்செய்தால் 10 டன் வரை மகசூலும் பெற முடியும். இவ்வாறு உதவி இயக்குநர் மணிமொழி தெரிவித்தார்.

**<u>தர்மபுரி ராமாக்காள் ஏரிக்கு வரும் தண்ணீரை சுத்திகரித்து பண்ணை குட்டைகள் உருவாக்க வேண்டும் அலுவலர்களுக்கு கலெக்டர் உத்தரவு</u>**



தர்மபுரி, ராமாக்காள் ஏரிக்கு வரும் தண்ணீரை சுத்திகரித்து பண்ணைகுட்டைகள் உருவாக்கி ஏரியை அழகுப் படுத்த வேண்டும் என்று அலுவலர்களுக்கு கலெக்டர் விவேகானந் தன் உத்தரவிட்டார்.

<u>ராமாக்காள் ஏரி</u>

தர்மபுரியில் அமைந்துள்ள ராமாக்காள் ஏரியை பொது மக்கள் பங்களிப்புடன் சுற்று லாத்தலமாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி ஏரிக்கரையை சீரமைத்தல், பூங்கா, நடை பாதை உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட் டன. இந்த ஏரியை கலெக்டர் விவேகானந்தன் பார்வை யிட்டு ஆய்வு மேற்கொண்டார். ராமாக்காள் ஏரிக்கு நீர் வரும் பகுதியில் தண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்து அதன் மூலம் பண்ணைகுட்டைகள் உருவாக்கி தண்ணீர் சேமித்து வைத்து ஏரியை அழகு படுத்த வேண்டும். நடைபயிற்சி செல் வோர் அவ்விடத்தை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண் டும். ஏரியை சுற்றியுள்ள நடை பாதையை விரிவாக்கம் செய்ய வேண்டும். பொதுமக்கள் அமர்ந்து ஓய்வெடுக்க சாய் தளம் மற்றும் வண்ண விளக்குகள் அமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அலு வலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும் இந்த பகுதிக்கு வரும் பொதுமக்களின் வாகனங் களை பாதுகாப்பாக நிறுத்த ஏதுவாக இடம் தேர்வு

செய்ய வும், ஏரியின் உள்ளே கால்நடை கள் செல்லாத வண்ணம் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கலெக்டர் உத்தரவிட்டார்.

<u>ஒருங்கிணைப்பு குழு கூட்டம்</u>

இதை தொடர்ந்து நல்லம் பள்ளி ஒன்றியம் லளிகம் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் குழந்தை நேயம் மற்றும் பாதுகாப்பிற்கான ஊராட்சி அளவிலான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நடைபெற்றது. இதில் கலெக்டர் விவேகானந் தன் கலந்து கொண்டு கல்வி யின் அவசியம் குறித்து எடுத்து கூறினார். குழந்தைகளுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்த வேண்டும். கல்வி செல்வம் நிரந்தரமானது வாழ்க்கைக்கு அடித்தளமே கல்வி தான் என்பதை மாண வர்களுக்கு நாம் உணர்த்த வேண்டும் என்று அவர் கூறினார். பின்னர் புதுவாழ்வு திட்டத் தின் மூலம் தையல் பயிற்சி முடித்த 10 பேருக்கு சான்றிதழ் களை வழங்கினார். லளிகம் தொழில் நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் கை நெசவு செய்யப் படுவதை பார்வையிட்டு அதன் விவரங்களை கேட்டறிந் தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ராமர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஸ்ரீதர், உதவி கலெக்டர் மேனகா, தாசில்தார் பாரதி, நகராட்சி ஆணையர் கிருஷ்ணகுமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>தடியன்குடிசை பகுதியில் மருத்துவ குணம் நிறைந்த அத்திப்பழம்</u>



தடியன்குடிசை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் மருத்துவ குணம் நிறைந்த அத்திப்பழம் பயிரிடப்பட்டுள்ளது.

<u>அத்திப்பழம்</u>

திண்டுக்கல் மாவட்டம் பெரும்பாறை அருகே உள்ள தடியன்குடிசை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் அத்திப்பழம் பயிரிடப் பட்டுள்ளது. தற்போது அத்திகாய் காய்க்க தொடங்கின. இந்த அத்திப்பழத்தை உலர வைத்தும் பதப்படுத்தியும் உண்ணலாம். உலர வைத்து பயன்படுத்தினால் அதிக நாட்கள் கெடாமல் இருக்கும்.அதே நேரம் தேனில் ஊறவைத்தும் உண்ணலாம். இதில் திம்லா அத்தி பழம் மிகவும் பழமை வாய்ந்த பழங்களில் ஒன்றாகும். இது 'மோரோஸி' குடும்பத்தைச் சேர்ந்தது ஆகும். இதன் தாவரவியல் பெயர் பைகஸ் கேரிகா. அத்தி மரங்கள் காட்டு மரங்களாகவே மலைப்பகுதிகளில் வளர்ந்து வருகிறது. இமாச்சல பிரதேசத்தில் 1700 மீட்டர் உயரம் வரை எல்லா பகுதிகளிலும் வளர்க்கப்படுகிறது. பொதுவாக இந்த அத்திமரம் மலைத் தோட்டப் பயிர்களில் ஊடுபயிராக பயிரிடப்படுகிறது.

<u>மருத்துவ குணம்</u>

இதன் பழங்கள் மிருதுவாகவும் சுவையாகவும் இருக்கும். ஜாம், மற்றும் ஜெல்லி தயாரிக்க மிகவும் உகந்தவை. இந்த பழங்கள் ரத்தத்தை சுத்தம் செய்து, உடல் உஷ்ணத்தை குறைத்து மூல நோயை கட்டுப்படுத்தும் திறன் கொண்டது. இந்த மரத்தின் பால் வயிற்றுப் பூச்சிகளை கொல்லும் திறன் கொண்டது. மேலும், வினிகரில் பதப்படுத்தபட்ட பழங்கள் கல்லீரல் மற்றும் மண்ணீரல் வீக்கத்தை தடுக்கும் குணமும் உள்ளது. இதன் இலைகளை மாட்டு தீவனமாக பயன்படுத்தலாம். மரத்தில் இருந்து பெறப்படும் பாலில் தயிர் செய்யப்படுகிறது. இந்த பழத்தில் அதிகம் கலோரியும், புரதம் (4 கிராம்) கால்சியம் (200 மில்லி கிராம்) இரும்புசத்து (4மில்லி கிராம்) மற்றும் உயிர்ச்சத்து ஏ–வும் நிறைந்துள்ளன. இதனால் அத்திப்பழம் மருத்துவத்தில் அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

<u>அதிக மகசூல்</u>

அத்தி மரமாக வளரும் மிதவெப்ப மண்டலப் பகுதிகள், இதன் சாகுபடிககு மிகவும் ஏற்றது. இந்தியாவில் மராட்டியம், கர்நாடகா, பஞ்சாப், பீகார், மேற்கு வங்காளம், தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது. இதை

தண்டுக்குச்சிகள் மூலம் விண்பதியம் மற்றும் ஒட்டுச் செடிகள் மூலமும் இனவிருத்தி செய்து நடவு செய்யலாம். அந்த வகையில் தமிழ்நாட்டில் டிம்லா அத்தி வகை சாகுபடி செய்யப்படுகிறது. தேர்வு செய்யப்பட்ட நாற்றுககளை 5.7 மீட்டர் இடைவெளியில் மழை காலங்களில் நடவு செய்யலாம். நன்கு வளர்ந்த மரம் ஒன்றுககு 20 கிலோ காய்ந்த தொழு எருவும் 500–600–கிராம் தழைச்சத்தும், 350–400 கிராம் மணிச்சத்தும் தேவைப்படுகிறது. இது வறட்சியைத் தாங்கி வளர்வதால் இவற்றை மானாவாரியாக பயிர் செய்யலாம். இருந்த போதிலும் தண்ணீர் பாய்ச்சுவதால் அதிக மகசூல் கிடைககிறது. நடவு செய்த 4 ஆண்டு முதல் மகசூல் தரவுள்ளது. ஆனால் 8 ஆண்டிற்கு பிறகு நிரந்தர வருமானம் கிடைககும். ஒரு மரத்தில் இருந்து 180 முதல் 360 பழங்கள் வரை கிடைககும் என்று தடியன்குடிசை தோட்டககலை ஆராய்ச்சி நிலைய இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் பிரணீதா உதவிப் பேராசிரியர்கள் முத்துராமலிங்கம், தமிழ்செல்வம் ஆகியோர் தெரிவித்தனர்.

## திற்பரப்பு வலதுகரை சானலை தூர்வாரி தண்ணீர் விடவேண்டும் விவசாயிகள் வலியுறுத்தல்



திற்பரப்பு வலதுகரை சானலை முறையாக தூர்வாரி தண்ணீர் விட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். வலதுகரை சானல் திற்பரப்பு தடுப்புஅணையில் இருந்து திற்பரப்பு வலதுகரை சானல் தொடங்குகிறது. இந்த சானல் திருவிதாங்கூர் மன்னர் ஸ்ரீமூலம் திருநாள்

காலத்தில் அமைக்கப்பட்டது ஆகும். இதன்மூலம் அருமனை பேரூராட்சியின் பெரும் பான்மையான பகுதிகள் பயன்பட்டு வருகிறது. மேலும் இது மஞ்சாலுமூடு , வெள்ளங்கோடு பகுதிக்கும் பாசனத்திற்கு பயன் படுகிறது. இந்த சானல் திற்பரப்பில் இருந்து அருமனை பேரூராட்சியின் மானசேகரம், படப்பச்சை, குஞ்சாலுவிளை, மானான்காணி, நல்லூர் கோணம், குரூர், மக்காடு கைதகம் வழியாக மஞ்சாலுமூடு மற்றும் வெள்ளங்கோடு ஊராட்சி களுக்கு செல்கிறது. தூர்வாரப்படவில்லை இதில் குஞ்சாலுவிளைப் பகுதியில் சுமார் ½ கி.மீ. தூரத்திற்கு பாறையை குடைந்து எடுக்கப்பட்டுள்ளது. இதில் நீண்ட தூரத்திற்கு ராட்சத குழாய் அமைக்கப் பட்டுள்ளது. பழமையான இந்த சானல் நீண்டகாலமாக முறையாக தூர்வாரப்படாமல் உள்ளது. குறிப்பாக குஞ்சாலுவிளையில் மண்மேடாகவும், சேறும் சகதியுமாக காட்சி யளிக்கிறது.மேலும் படப்பச்சை, மாணாங்காணி, நல்லூர் கோணம் ஆகியபகுதிகளில் சானலில் மண் நிரம்பி உள்ளது. இதனால் இந்த சானலில் கடைமடை பகுதி வரை தண்ணீர் செல்வதில்லை. தண்ணீர் திறந்து விட்டாலும் சிறிது தூரத்தில் தேங்கி நின்று வீணாகிறது. இந்த சானலை முறையாக தூர்வாரி தண்ணீர் விட வேண்டும் என்று விவசாயிகள் சங்கம் மூலம் கோரிக்கை விடுத்தும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை. எனவே, உடனடியாக சானலை தூர்வாரி தண்ணீர் விட வேண்டும் என்று இப்பகுதி விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

<u>**வாழைத்தார் விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**</u>



வாழைத்தார் விலை உயர்ந்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். ஆயிரக்கணக்கான ஏக்கரில் கரூர் மாவட்டம், நொய்யல், மரவாபாளையம், சேமங்கி, முத்தனூர், நடையனூர், கோம் புப்பாளையம், திருக்காடு துறை, என். புகழூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக் கணக்கான ஏக்கரில் விவசாயி கள் வாழை பயிரிட்டுள்ளனர். இங்கு விளையும் வாழைத் தார்களை உள்ளூர் பகுதிகளில் உள்ள கடைகளுக்கும், வியா பாரிகளுக்கும் விற்பனை செய்கின்றனர். சில வியாபாரிகள் வாழைத் தோட்டத் தை குத்தகைக்கு எடுத்துக் கொள்கின்றனர். வாழைத் தோட்டத்தில் விளையும் வாழைத்தார்களை விவசாயி களிடமிருந்து வியாபாரிகள் வாங்கி லாரிகள் மூலம் தமிழ் நாட்டிலுள்ள திண்டுக்கல், மதுரை, திருச்சி, ஈரோடு, கோவை, நாமக்கல், நீலகிரி, சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, உத்தரபிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கின்றனர்.

விவசாயிகள் மகிழ்ச்சி

கடந்த வாரத் தில் பூவன் வாழைத்தார் ரூ.200–க்கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.300–க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.200–க்கும், பச்சை நாடன் வாழைத்தார் ரூ.200–க்கும், மொந்தன் வாழைத்தார் ரூ.400–க்கும் வியாபாரிகள்

வாங்கிச்சென்றனர். நேற்று பூவன் வழைத்தார் ரூ.450–க் கும், ரஸ்தாலி வாழைத்தார் ரூ.450–க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார் ரூ.300–க்கும், பச்சை நாடன் வாழைத் தார் ரூ.400–க்கும், மொந்தன் வாழைத்தார் ரூ.600–க்கும் வியா பாரிகள் வாங்கிச் சென்றனர். ஆடி 18–ஐ முன் னிட்டு பல்வேறு கோவில்களி லும், பல்வேறு பகுதிகளிலும் விஷேசங்கள் நடைபெற இருப்பதால் வாழைத்தார் விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். வாழைத்தார் விலை உயர்ந் துள்ளதால் வாழை பயிரிட் டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## <u>திருவிளையாட்டத்தில், விவசாயிகளுக்கு ரூ.1½ கோடியில் வேளாண்மை இடுபொருட்கள் பவுன்ராஜ் எம்.எல்.ஏ. வழங்கினார்</u>



பொறையாறு, திருவிளையாட்டம் பகுதியில் விவசாயிகளுக்கு ரூ. 1 கோடியே 60 லட்சம் செலவில் வேளாண்மை இடுபொருட்கள் மற்றும் கருவிகளை பவுன்ராஜ் எம்.எல்.எ. வழங்கினார்.

### <u>வேளாண்மை இடுபொருட்கள்</u>

பொறையாறு அருகே திருவிளையாட்டம் கிராமத்தில் குறுவை தொகுப்பு திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கும் விழா நடந்தது. விழாவிற்கு பவுன்ராஜ் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் சீனிவாசன், ஒன்றியக்குழு துணைத் தலைவர் மணி ஆகியோர்

முன்னிலை வகித்தனர். செம்பனார்கோவில் வேளாண்மை உதவி இயக்குனர் வெற்றிவேலன் வரவேற்றார். விழாவில் பவுன்ராஜ் எம்.எல்.ஏ., விவசாயிகளுக்கு ரூ. 1 கோடியே 60 லட்சம் செலவில் வேளாண்மை இடுபொருட்கள் மற்றும் கருவிகளை வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

**பசுமைப்புரட்சி**

ஒரு மாநிலம் வளர்ச்சி அடைய வேண்டும் என்றால் விவசாயம் சிறந்து விளங்க வேண்டும் என்பதை உணர்ந்த தமிழக முதல்–அமைச்சர், வேளாண்மை துறையில் தனி கவனம் செலுத்தி 2–வது பசுமைப்புரட்சி செய்து வருகிறார். கடந்த ஆண்டு தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டது. அப்போது மத்தியில் ஆட்சி செய்த காங்கிரஸ் அரசு தமிழகத்திற்கு எதுவும் செய்யவில்லை. அந்த நேரத்தில் தமிழக முதல்–அமைச்சர், விவசாயிகளின் நலன் கருதி வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் வழங்கினார். மேலும், சம்பா நாற்றங்கால் உற்பத்தி செய்து விவசாய குழுக்கள் அமைத்து, அவர்களுக்கு நாற்று வழங்கியதோடு மும்முனை மின்சாரம், டீசல், பாசன நீர் குழாய்களை மானியத்துடன் வழங்கி உள்ளார். தற்போது வழங்கப்பட்டுள்ள வேளாண்மை இடுபொருட்கள் மற்றும் கருவிகளை விவசாயிகள் பயன்படுத்தி உற்பத்தியை பெருக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். விழாவில் வேளாண்மை அலுவலர் கனகம், உதவி அலுவலர்கள் கலையரசன், ரவிச்சந்திரன், ஜெயக்குமார், உதயசூரியன், ஆட்மா தொழில்நுட்ப அலுவலர்கள் திருமுருகன், பார்த்தீபன், ஊராட்சி மன்ற தலைவர்கள் கண்ணன், சசிகுமார், கோவிந்தசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் துணை வேளாண்மை அலுவலர் கண்ணன் நன்றி கூறினார்.

**<u>வாழை விவசாயிகளின் நலன் கருதி சந்தவாசல்–படவேடு பகுதியில் வாழை ஆராய்ச்சி மையம் அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி தகவல்</u>**



சந்தவாசல்– படவேடு பகுதியை மையமாகக் கொண்டு விவசாயிகளின் நலன்கருதி வாழை ஆராய்ச்சி மையம் அமை க்கப்படும் என அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார்.

சாதனை விளக்க கூட்டம்

கண்ணமங்கலத்தை அடுத்த ஏ.கே.படவேடு, படவேடு, ராமநாதபுரம் ஆகிய கிராமங் களில் அ.தி.மு.க. அரசின் மூன்றாண்டு சாதனைகளை விளக்கி மாவட்ட இலக்கிய அணி சார்பில் தெருமுனை பிரசார கூட்டங்கள் நடை பெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட இலக்கிய அணி செயலாளர் இ.என்.நாராயணன் தலைமை தாங்கினார். போளூர் ஒன்றிய ஊராட்சி தலைவர்கள் கூட் டமைப்பு தலைவர் கே.எஸ்.மனோகரன், ஒன்றிய துணைச் செயலாளர் சாந்தாமணி, ஒன்றிய இலக்கிய அணி துணைச்செயலாளர் லோக நாதன், படவேடு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் எம்.ஆறுமுகம், வனக்குழு தலைவர்கள் கோவிந்தசாமி, மணி உள்பட பலர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி அ.தி.மு.க. செயலா ளர் ஆர்.அன்பழகன் வர வேற்று பேசினார். முன்னாள் எம்.எல்.ஏ. நளினி மனோகரன், ஒன்றி யக்குழு துணைத்தலைவர் எம்.ரகு, ஊராட்சி தலைவர் தீபாவெற்றிவேலன் ஆகியோர் தொடக்க உரையாற்றினார் கள். கூட்டத்தில்

தமிழக வேளாண்மைத்துறை அமைச் சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி கலந்து கொண்டு பேசினார். அவர் பேசியதாவது:– ரூ.1 கோடியில் மேம்பாலம்

தமிழக முதல்–அமைச்சராக மூன்றாவது முறையாக பொறுப்பேற்றுள்ள ஜெயல லிதா பொற்கால ஆட்சியை நடத்தி வருகிறார். குறிப்பாக படவேடு பகுதியில் செண்ப கத் தோப்பு அணை ரூ.3 கோடியே 30 லட்சம் மதிப்பிலும், சகாய புரம்,– செண்பகத்தோப்பு தார் சாலை ரூ. 90 லட்சம் மதிப்பி லும் நிறைவேற்றப்பட்டது.

மேலும் படவேடு ராமர் கோவில் அருகில் கமண்டல நதியில் இடிந்து போன மேம் பாலம் புதுப்பித்துகட்ட ரூ. 1 கோடியே 30 லட்சம் மதிப்பில் டெண்டர் விடப்பட்டு விரை வில் பணிகள் தொடங்க உள் ளது.

தங்கும் விடுதி

ஏ.கே.படவேடு பகுதியில் ஆற்று மேம்பாலத்தில் தடுப்பு சுவர் அமைக்கும் பணி ரூ. 27 லட்சம் மதிப்பில் நெடுஞ்சாலைத்துறை மூலம் அமைக் கப்பட்டு வருகிறது. படவேடு – ஆரணி சாலை ரூ.24 கோடி செலவிலும், படவேடு– காளச முத்திரம் வரை தார்சாலை ரூ.1½ கோடி மதிப்பிலும், பங்களாமேடு– ராமநாதபுரம் தார்சாலை 1கோடியே 10 லட் சம் மதிப்பிலும் நிறைவேற்றப் பட்டு வருகிறது. ரேணுகாம்பாள் கோவி லுக்கு வரும் பக்தர்களுக்கு வசதியாக ரூ.1 கோடியே 70 லட்சம் மதிப்பில் தங்கும் விடுதி, வாகன நிறுத்தம், குளி யல் அறைகள், கழிப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன.

வாழை ஆராய்ச்சி மையம்

படவேடு விரக்கோயில் அருகில் ரூ.26 லட்சம் மதிப் பில் கால் நடை மருத்துவ மனை கட்டப்பட உள்ளது. சந்தவாசல் படவேடு பகுதியை மையமாக கொண்டு வாழை விவசாயிகளின் வசதிக்காக வாழை ஆராய்ச்சி மையமும், படவேட்டில் ரூ. 4 கோடி மதிப்பில் புதிய கிடங்கும் அமைக்கப்பட உள்ளது. இன்னும் 6 மாதத்தில் பட வேடு பகுதியில் அனைத்து கிராமங்களில் உள்ள 4500 குடும்ப அட்டைதாரர் களுக்கு விலையில்லா மிக்சி, கிரைண் டர், மின்விசிறி வழங்க ஏற் பாடு செய்யப்படும். இதுகுறித்து யாரேனும் வீணான வதந்திகளை பரப் பினால் அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்கப்படு வார்கள். மேற்கண்டவாறு அவர்

பேசினார். கூட்டத்தில் தலைமை கழக பேச்சளர் சங்கரதாஸ், வெங் கட்ராமன், மாவட்ட ஊராட் சிக்குழுதலைவர் எம்.எஸ். நைனாகண்ணு, துரிஞ்சாபுரம் ஒன்றியக்குழு தலைவர் கோவிந்தராஜ், மாவட்ட அண்ணா கொழிற்சங்க செய லாளர் புருஷோத்தமன், மாவட்ட துணை செயலாளர் குப்புசாமி, இலக்கிய அணி மாவட்ட துணை செயலாளர் எஸ்.கமலக்கண்ணன், போக்கு வரத்து மண்டல செயலாளர் என்.கோவிந்தராஜ், மாவட்ட மாணவர் அணி இணை செய லாளர் உஷாநாதன், புதுப் பாளையம் ஒன்றிய செயலா ளர் டி.சுந்தரமூர்த்தி, ஒன்றிய பாசறை செயலாளர் பழனி ராஜ், வாழியூர் ஊராட்சி தலைவர் ஆர்.எழுமலை மற்றும் இலக்கிய அணி நிர்வா கிகள், ஊராட்சி செயலாளர் கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட இலக்கிய அணி இணை செயலர் ஆர்.முத்துக்கண்ணு நன்றி கூறினார்.

**<u>மரக்காணம் பகுதியில் மரவள்ளி கிழங்கு பயிரிடுவதில் விவசாயிகள் தீவிரம்</u>**



மரக்காணம் பகுதியில் மரவள்ளி கிழங்கு பயிரிடும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

மரவள்ளி கிழங்கு

மரக்காணம் பகுதியில் உள்ள மானாவாரி நிலங்களில் ஆண்டுதோறும் விவசாயிகள் ஆடி மாதத்தில் மரவள்ளி கிழங்கினை பயிரிடுவது வழக்கம். இந்த

நிலையில் மரக்காணம் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்பு ஓரளவுக்கு நல்ல மழை பெய்தது. அதனை அடுத்து நடப்பாண்டில் ஓமிப்பேர், நடுக்குப்பம், கிளாபாக்கம், வட நெற்குணம், வன்னிப்பேர், கந்தாடு, அடசல், வண்டி பாளையம், ஆலத்தூர், நகர் உள்பட 70–க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் மரவள்ளி கிழங்கு பயிர் செய்யும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது:– ஆண்டு தோறும் மரவள்ளி கிழங்கினை ஆடி மாதத்தில் பயிர் செய்து, பங்குனி மாதத்தில் அதனை அறுவடை செய்வோம். கடந்த ஆண்டு போதிய அளவிற்கு மழை பெய்யாத காரணத்தால் எங்களது பயிர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டது. இதனால் விளைச்சல் குறைந்ததால் விவசாயிகளான என்னை போன்று பலருக்கும் பெரும் நஷ்டம் ஏற்பட்டது.

ஆலோசனை

எனினும் நடப்பாண்டில் வடகிழக்கு பருவமழை யானது நன்றாக பெய்யும் என்ற நம்பிக்கையில் நாங்கள் மரவள்ளி கிழங்கினை நம்பிக்கையுடன் பயிர் செய்து வருகின்றோம். வேளாண்மை துறை அதிகாரிகள் எங்களுக்கு எந்த விதமான ஆலோ சனை களையும் சரிவர வழங்கு வதில்லை. எனவே விவசாயி களின் நலன் கருதி நடப்பாண்டி லாவது மரவள்ளி கிழங்கு பயிரில் நோய் தாக்குதல் ஏதும் ஏற்படாமல் இருக்க வேளாண்மை துறை அதி காரிகள் விவசாயிகளுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்க வேண்டும். மேலும் மானிய விலையில் இடு பொருட்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். அறுவடை செய்யப்பட்ட கிழங்குகளை நாங்கள் விற்பனைக்காக ஆத்தூரில் உள்ள மாவரைக்கும் ஆலைகளுக்கு கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இதனால் எங்களுக்கு பெரும் செலவு ஏற்படுகின்றது. அதனை தவிர்க்க மரக்காணம் பகுதியில் மரவள்ளி கிழங் கினை அரைக்கும் மாவு ஆலை ஒன்றினை மாவட்ட நிர்வாகம் அமைத்து கொடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயத் துறைக்கு தனி பட்ஜெட் தாக்கல் செய்ய வேண்டும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை



விருதுநகர், தமிழக அரசு விவசாயத் திற்கென தனிபட்ஜெட் தாக்கல் செய்ய வேண் டும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் விருதுநகர் மாவட்ட கிளை கோரியுள்ளது.

மாவட்ட குழு

விருதுநகரில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் விருது நகர் மாவட்ட குழு கூட்டம் நடைபெற்றது. மாவட்ட தலைவர் ராம்தாஸ் தலைமை யில் நடைபெற்ற இந்த கூட்டத் தில் விருதுநகர் மாவட்ட இந்திய கம்யூனிஸ்டு கட்சி செயலா ளரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான ராமசாமி, விவசாய சங்க மாவட்ட செயலாளர் சீனிவாசன், இந்திய கம்யூனி ஸ்டு கட்சியின் தாலுகா செயலாளர் சீனிவாசன் ஆகி யோர் கலந்து கொண்டு பேசினர்.

தீர்மானங்கள்

விருதுநகர் மாவட்டம் கடும் வறட்சியால் பாதிக்கப்பட் டுள்ள நிலையில் விவசாயிகளுக் கும், விவசாய தொழிலாளர் களுக்கும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. கால் நடைகளுக்கு தீவனமில்லை. இம்மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து உரிய நிவாரணம் வழங்க வேண்டும். வருவாய்த்துறை

அமைச்சர் வறட்சி பாதிப்பு இல்லை என அறிவித்ததை கண்டித்து கறுப்பு கொடி போராட்டம் நடைபெறும். வறட்சியை போக்க கண்மாய் வரத்துக் கால்வாய்களை மராமத்து செய்ய வேண்டும். திருச்சுழி கண்மாய்க்கு தண்ணீர் வரும் வகையில் குண்டாற்றில் தடுப் பணை கட்ட வேண்டும்.

<u>தனி பட்ஜெட்</u>

விவசாய துறைக்கு தனி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட வேண்டும். தென்னக நதிகள் இணைப்பு திட்டத்தை நிறைவேற்றிட வேண்டும். 60 வயதான விவசாயிகள், விவ சாய தொழிலாளர்கள், கிரா மப் புற கைவினைஞர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும். நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.2500 ஆகவும், கரும்பு ஒரு டன்னுக்கு ரூ.4 ஆயிரமாகவும், உரி தேங்காய் ஒரு கிலோவுக்கு ரூ.25 ஆகவும் விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டன.

தி இந்து
தமிழால் இணைவோம்

**<u>விவசாயிகள் நலனே முக்கியம்; உலக வர்த்தக அமைப்புடன் சமரசம் இல்லை - மத்திய நிதியமைச்சர் அருண் ஜேட்லி</u>**




விவசாயிகள் நலனே முக்கியம்; உலக வர்த்தக அமைப்புடன் நடத்தும் பேச்சுவார்த்தையின்போது விவசாயிகள் நலனை சமரசம் செய்துகொள்ள மாட்டோம் என்று நிதியமைச்சர் அருண் ஜேட்லி கூறினார். உணவுப் பாதுகாப்பு விவகாரத்தில் இந்தியாவின் வலுவான நிலைப்பாடு ஜெனீவா நகரில் உலக

வர்த்தகஅமைப்பு நடத்திய பேச்சுவார்த்தை தோல்வியில் முடிய காரணமாக அமைந்தது. இந்நிலையில், டெல்லியில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் அருண் ஜேட்லி பேசும்போது, “உலகின் சக்திவாய்ந்த நாடுகளுக்கு எதிராக ஒரு உறுதியான நிலைப்பாட்டை நாம் எடுக்கவிருக்கிறோம். முந்தைய அரசின் கொள்கைகளை நாம் பின்பற்றினால் நமது சிறு விவசாயிகளின் நலன்கள் பாதிக்கப்படும். நம்மை பொறுத்தவரை விவசாயிகள் நலனே முக்கியம். அரசுக்கு நிறைய நெருக்கடி இருந்தபோதும், உலக வர்த்தக அமைப்பின் அனைத்து பேச்சுவார்த்தைகளிலும் பங்கேற்போம். ஆனால் ஏழை விவசாயிகளின் நலன்களை சமரசம் செய்துகொள்ளமாட்டோம் என்று முடிவு செய்துள்ளோம். நாட்டின் சிறு விவசாயிகள் மிகுந்த துயரத்தில் உள்ளனர். சாகுபடிக்கு அவர்கள் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். சமயங்களில் கடனை செலுத்த முடியாமல் போகும்போது தற்கொலைக்கு கூட தள்ளப்படுகிறார்கள் என்றார்.